Service and Information Update

# கோவிட் 19 (COVID-19) தொற்று பரவலை எதிர்கொள்ளும் முகமாக ஏப்ரல் 17 ஆம் தேதி முதல் ப்ராம்ப்ட்டன் போக்குவாத்து சேவையில் மாற்றங்கள்

ப்ராம்ப்ட்டன், ON (ஏப்ரல் 16, 2020) – கோவிட் 19 (COVID-19தொற்று பரவலைத் தடுக்கவும், ப்ராம்ப்ட்டன் நகர் பேருந்து சேவையானது தன்னுடைய சமூகத்தினருக்கு பாதுகாப்பான சேவை வழங்குவதை உறுதி செய்யவும், ஏப்ரல், 17 ஆம் தேதி வெள்ளிக்கிழமை முதல் பேருந்து சேவைகள் பின் வருமாறு மாற்றம் செய்யப்படும்.

சுகாதாரப் பராமரிப்பு வசதியமைப்புக்கள் மற்றும் பணியிடப் பகுதிகளைச் சென்றடைவதற்கு ஆதரவளிப்பதற்கும், பிற ப்ராம்ப்ட்டன் பேருந்து சேவைகளுக்கான இணைப்பினை மேம்படுத்தவும் பின் வரும் சேவைகளில் பேருந்துகள் மீண்டும் ஓடத்துவங்கும். எங்களிடம் கைவசம் இருக்கும் பேருந்துகளைக் கொண்டு இந்த சேவைகளை நிலைக்கச் செய்வதற்கான மிகச்சிறந்த முயற்சிகள் எடுக்கப்படும்.

**வழித்தடம் 8 சென்டர்**

***ப்ரமலியா சிட்டி சென்டர் (Bramalea City Centre), பீல் மெமோரியல் சென் டர் (Peel Memorial Centre) மற்றும் ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினல், ( Brampton Gateway Terminal )ஆகியவற்றை அடைதல்***

- 50-நிமிடங்களுக்கு ஒருமுறையான ஓட்டம்
- முதலாவது பயண ஓட்டம் காலை 5 மணிக்கு ப்ரமலியா டெர்மினலில் இருந்து புறப்படும்
- முதலாவது பயண ஓட்டம் காலை 5:50 மணிக்கு ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினலில் இருந்து புறப்படும்

**வழித்தடம் 9 வோட்டென் (Vodden )**

***மவுண்ட் ப்ளஸெண்ட் கோ (Mount Pleasant GO), ப்ரமலியா டெர்மினல் ( Bramalea Terminal ) மற்றும் கிழக்கு முனைகளில் இருக்கின்ற பணியிடப் பகுதிகளை அடைதல்.***

- 60-நிமிடங்களுக்கு ஒருமுறையான ஓட்டம்
- முதலாவது கிழக்கு நோக்கிய பயண ஓட்டம் காலை 5 மணிக்கு மவுண்ட் ப்ளசெண்ட் கோ விலிருந்து புறப்படும்

- முதலாவது மேற்கு நோக்கிய பயண ஓட்டம் காலை 5:57 மணிக்கு மற்றும் வில்லியம்ஸ் பார்க்வே (Williams Parkway) மற்றும் எட்வாக் ட்ரைவ் (Edvac Drive) –லிருந்து புறப்படும்

**வழித்தடம் 52 மெக்மர்க்கி (McMurchy)**

***டவுண்டவுன் டெர்மினல் (Downtown Terminal) மற்றும் ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினலை(Brampton Gateway Terminal) அடைதல்.***

- 50-நிமிடங்களுக்கு ஒருமுறையான ஓட்டம்
- முதலாவது வடக்கு நோக்கிய பயண ஓட்டம் காலை 5 மணிக்கு ப்ராம்ப்ட்டன் கேட்வே டெர்மினலில் இருந்து புறப்படும்
- முதலாவது தெற்கு நோக்கிய பயண ஓட்டம் காலை 5:20 மணிக்கு டவுண்டவுன் டெர்மினலில் இருந்து புறப்படும்

தற்சமயம் நடப்பில் இருக்கும்சேவை வழித்தடங்கள் மற்றும் அவற்றுக்கான கால அட்டவணைகளின் பட்டியலுக்கு வருகை தரவும்: www.bramptontransit.com

உடல்ரீதியான சமூக விலகலைக் கடைப்பிடிப்பதற்காக, பேருந்தின் இருக்கை எண்ணிக்கையில் பாதியளவுக்கே பயணிகளை ஏற்றுவதை நாங்கள் தொடர்ந்து செய்து வருவதால், சில ப்ராம்ப்ட்டன் பேருந்து தடங்களில் கூடுதல் வண்டிகள் ஒதுக்கீடு செய்யப்படுகின்றன. பேருந்து எண்ணிக்கை கைவசம் இருக்கும் அளவிற்கு சேவைகளை அளிப்பதும் பொதுப் போக்குவரத்திற்கான நியாயமான அணுகலை அனைத்துப் பகுதிகளிலும் கிடைக்கச்செய்வதை உறுதி செய்வதே எங்கள் லட்சியமாகும்.

**கோவிட் 19 (COVID-19) பாதுகாப்பு நடவடிக்கைகள்**

மேம்படுத்தப்பட்ட கால அட்டவணைப்படி பேருந்துகளைத் தூய்மைப்படுத்தி அவற்றில் கிருமிநாசினி தெளிக்கும் வேலை மேற்கொள்ளப்படும். ஒவ்வொரு 48 மணிக்கொரு முறை பேருந்துகளின் அனைத்து பரப்புகள், இயக்குபவர் அமருமிடம் மற்றும் அனைத்து இருக்கைகளையும் கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைப்பதே ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவையின் இலக்காகும். தற்சமயம் பேருந்துகள் அனைத்திலும் 24 மணி நேரத்திற்கு ஒருமுறை கிருமிநாசினி தெளிக்கப்படுகின்றன. பேருந்து முனையங்கள் மற்றும் நிறுத்தங்களில் உள்ள மேற்பரப்புகளும்கூட தினசரி அடிப்படையில் தூய்மைப்படுத்தி கிருமிநாசினி தெளித்து சுகாதாரமாக வைக்கப்படும். பேருந்து பயணியர் தங்கள் கைவசம்

தமது உபயோகத்திற்காக இதுபோன்ற  கிருமி நாசினி, கைகளைக் கழுவும் சுகாதார பொருட்களை வைத்திருந்து தங்கள் கைகளை அடிக்கடி கழுவி சுத்தமாக வைத்திருக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

ஆபத்துக்களைக் கண்காணிப்பதற்காக, பீல் பப்ளிக் ஹெல்த் (Peel Public Health) மற்றும் ப்ராம்ப்ட்டன் நகர அவசரகால நடவடிக்கைகளுக்கான அலுவலகம் (Brampton Emergency Measures Office) ஆகியோருடன் சேர்ந்து ப்ராம்ப்ட்டன் நகர நிர்வாகம் நெருக்கமாக பணியாற்றி வருகிறது. வாடிக்கையான புது தகவல்களுக்காக வருகை புரியவும்: www.brampton.ca/covid19 மற்றும் சேவை பற்றிய புதுத் தகவல்களுக்கு வருகை புரியவும்: bramptontransit.com அல்லது  @bramptontransit  ஐ ட்விட்டரில் பின்பற்றவும். கேள்விகள் ஏதுமிருந்தால்,  ப்ராம்ப்ட்டன் பேருந்து போக்குவரத்து சேவைக்கான தொடர்பு மையத்தை  905.874.2999 என்ற எண்ணில் அழைத்து கேட்கலாம்.

-30-

**ஊடக தொடர்பு**
மோனிக்கா துக்கல்
ஒருங்கிணைப்பாளர், ஊடகம் & சமுதாய  ஈடுபாடு
யுக்திரீதியான தகவல் தொடர்பு
ப்ராம்ப்ட்டன் நகரம்
*905-874-3426 | Monika.Duggal@brampton.ca*